கட்டுரை 01 · ARTICLE 01 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# தொல்காப்பியத்தில் தகவல் தொடர்பியல்

*Information Communication in Tolkāppiyam*

**முனைவர் சௌ. ஜெயா**

உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்

***Dr. S. Jaya**, Assistant Professor, Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar*

**பக்கங்கள்:** 1–7

## ஆய்வுச் சுருக்கம்

**தொல்காப்பியத்தில் தகவல் தொடர்பியல்** என்னும் இக்கட்டுரை, தொல்காப்பியத்தின் வழியாகப் பண்டைத் தமிழர்களின் தகவல் தொடர்பு முறைகளை ஆய்வு செய்கிறது. நவீனத் தகவல் தொடர்பியலுக்கு அடிப்படையாக விளங்கும் கருத்துகள் தொல்காப்பியத்தில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். மெய்ப்பாடு, மடலேறல், அகப்பொருள் மற்றும் புறப்பொருள், இறைச்சி, தூது, பறவை நிமித்தம், முரசு, பூக்கள் ஆகிய கூறுகள் தகவல் தொடர்பு ஊடகங்களாகச் செயல்பட்ட விதம் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. மெய்ப்பாடு உடல்மொழி வழியாக உணர்வுகளை வெளிப்படுத்துவதையும், மடலேறல் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் தகவல் பரிமாற்ற முறையாக விளங்கியதையும் விளக்குகிறது. இறைச்சி,உள்ளுறை மறைமுகமாகச் செய்திகளை உணர்த்தும் உத்தியாகவும், தூது தனிமனித உறவுகளையும் சமூக உறவுகளையும் பேணும் முறையாகவும் அமைந்துள்ளன. பறவை நிமித்தம் இயற்கையின் வழியாகத் தகவல்களை அறியும் முறையையும், முரசு அரசின் அறிவிப்புகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஊடகமாகவும், பூக்கள் போரின் தன்மையை அடையாளப்படுத்தும் குறியீடுகளாகவும் விளங்கியுள்ளன. இவ்வாறு தொல்காப்பியத்தில் இடம்பெறும் பல்வேறு தகவல் பரிமாற்றக் கூறுகளை ஆராய்வதன் மூலம், பண்டைத் தமிழர்கள் மொழி, உடல்மொழி, குறியீடு, இயற்கை மற்றும் சமூக மரபுகள் ஆகியவற்றின் வழியாகத் தகவல்களைப் பரிமாறிக்கொண்ட நுட்பத்தையும், அவர்களின் வாழ்வியல் மற்றும் அறநெறிச் சிந்தனைகளையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**திறவுச்சொற்கள்:** தொல்காப்பியம்; தகவல் தொடர்பியல்; மெய்ப்பாடு; மடலேறல்; இறைச்சி; தூது; குறியீட்டியல்; பண்டைத் தமிழர் வாழ்வியல்

## Abstract

This article, entitled *Information Communication in Tolkāppiyam*, examines the information communication methods of ancient Tamils through the text of Tolkāppiyam. The primary objective of this study is to explain how concepts that form the foundation of modern communication are represented in Tolkāppiyam. The article analyses the functions of various elements, namely Meyppādu (expressions of emotions), Maṭalēṟal (the public expression of love), Akapporuḷ and Puṟapporuḷ (the inner and outer domains of life), Iṟaicci (implicit meaning), Uṭaṉuṟai (implied meaning through metaphor), Thoothu (messenger communication), bird omens, the royal drum, and flowers as mediums of communication. Meyppādu explains the expression of emotions through body language, while Maṭalēṟal illustrates a mode of communication used to attract public attention. Iṟaicci and Uṭaṉuṟai function as techniques for conveying messages indirectly, whereas Thoothu serves as a means of maintaining interpersonal and social relationships. Bird omens represent a method of interpreting information through nature; the royal drum functioned as a medium for conveying royal announcements to the public; and flowers served as symbolic indicators of the nature of warfare. By examining these various elements of communication found in Tolkāppiyam, the study highlights the sophisticated ways in which ancient Tamils exchanged information

through language, body language, symbols, nature, and social customs. It also brings to light their ways of life and ethical values.

**Keywords:** Tolkāppiyam; Information Communication; Meyppādu; Maṭalēṟal; Iṟaicci; Uṭaṉuṟai; Thoothu; Semiotics; Ancient Tamil Life

## முன்னுரை

நவீன தகவல் தொடர்பியல் இன்று உலகில் இல்லாத இடங்களே இல்லை என்று கூறலாம். தகவல் தொடர்பியலில் தனித்துவம் கொண்டவர்கள்நம் முன்னோர்கள். முறையான தொடர்புத்திறன் பெற்று தங்கள் காதலையும் வீரத்தையும் வெளிப்படுத்தி ஒரு செம்மையான வாழ்வியலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பதற்கு சான்றாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். அன்றைய வாழ்வில் தனிமனித வாழ்க்கைக்குத் தேவையான அகச்செய்தியையும் சமூகத்திற்குத் தேவையான புறச்செய்திகளையும் நன்முறையில் பரிமாறி வாழ்ந்ததோடு மட்டுமில்லாமல் அச்செய்தி பரிமாற்றம் அனைத்தும் ஓர் அறநிலையில் நின்று செயல்பட்டதை அறிய முடிகிறது. அவ்வகையில் நம் தமிழர் கொண்ட செய்தி பரிமாற்றங்களை தொல்காப்பியத்தின் வழி ஆய்வதே ஆய்வு நோக்கமாக அமைகிறது.

## மெய்ப்பாடு

மொழிகள் தோன்றுவதற்கு முன்னர் தோன்றிய முதன்மை மொழி மெய்ப்பாடு ஆகும் . தகவல் தொடர்பியலில் மெய்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. மெய்ப்பாடு என்பது உள்ள உணர்ச்சிகளை உடல்மொழியின் வாயிலக விளக்குவது. அக உணர்வுகளின் புற வெளிப்பாடு மெய்ப்பாடு. தொல்காப்பியர் மனித உணர்வுகளின் வெளிப்பாட்டினை எட்டு வகை மெய்ப்பாடுகளாக வகைப்படுத்துகிறார்.

> ”நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
> அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப”
>
> ( தொல்.மெய்.3)

1. நகை – நேர்மறையான எண்ணத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது.
2. அழுகை - பிறரின் இரக்கத்தையும் உதவியை நாடும் ஒரு தகவல் வெளிப்பாடு
3. இளிவரல் - தாழ்வு மனப்பான்மை மற்றும் தவறை உணர்ந்ததை காட்டும் உடல்மொழி
4. மருட்கை – புதிய தகவல்களை அல்லது ஆச்சரியமான நிகழ்வுகள்களின் போது வெளிப்படுவது.
5. அச்சம் - பயத்தின் தன்மையை வார்த்தைகளின்றி பிறருக்குத் தெரிவிப்பது.
6. பெருமிதம் – தன்னம்பிக்கை மற்றும் ஆளுமைகளை வெளிப்டுத்தும் உணர்ச்சி
7. வெகுளி - உள்ளத்து எதிர்ப்பை வெளிப்படுத்துவது
8. உவகை – மன மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது.

> வார்த்தைகளின் வழி வெளிப்படுத்த முடியாத தகவல்களை உடல்மொழி மிகத் தெளிவாக பிறருக்கு எடுத்துரைக்கும். பயனுள்ள தகவல் தொடர்புக்கு மொழிஆற்றல் மட்டுமின்றி உணர்வுகளை நேர்த்தியாக வெளிப்படுத்தக் கூடிய மெய்ப்பாடும் இன்றியமையாதது ஆகும். இந்தத் தொடர்புத் திறனை அன்றே சிறந்த முறையில் அறிந்து வகைப்படுத்தியுள்ளனர்.

## மடலேறுதல்

> விரும்பும் பெண்ணை அடைய முயலும் வழிமுறையே மடலேறுதல் ஆகும். காதலன் தன்னை வருத்திக் கொண்டு அதன் மூலம் தன் காதலை ஊரார்க்கு புலப்படுத்துவது ஆகும். இதுபெருந்திணைக்குள் ஒன்றாகத் தொல்காப்பியரால் சுட்டப்பட்டுள்ளது.
>
> ஏறியமடல் திறம் இளமை தீர்திறம்
>
> தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
>
> மிக்க காமத்து மிடலோடு தொகைஇச்
>
> செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே (தொல்.பொ.54)

மடலேறுதல் என்பது பண்டைகால தகவல் பரிமாற்ற நிலையளில் இருந்துள்ளதை இலக்கியங்கள் பல இடங்களிலும் பதிவு செய்துள்ளது. மடலேறுதல் தன்மையை உரைக்க முற்பட்ட ந.சுப்பு ரெட்டியார் ,” மடலேறுதல் என்ற செயல் காம எண்ணம் முதிர்ந்து தலையெடுத்து நிற்கும் போது ஆண்மக்கள் தாம் காதலித்த தலைமகளைக் கூடுவதற்கு விரும்பி மேற்கொள்வதாகும் என்கிறார். அன்பின் மிகுதியிலே இந்த தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது. இந்த தகவல் பரமாற்றத்தில் மற்றும்மொரு விதி என்னவெனில் இந்த தகவல் தொடர்பில் பெண்களுக்கு பங்கு இல்லை என்பதுதான். தமிழ் சமூக மரபில் பெண்கள் தங்கள் காதலை இவ்வளவு தீவிரமாக ஊரறிய வெளிப்படுத்தும் வழக்கம் இல்லை என்பதை இது காட்டுகிறது.

எத்தினை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான

(தொல்.அகத்.38)

இந்தத் தகவல் தொடர்பில் பெண்கள் பங்குபெறுவதை அக்காலச் சமூகம் இழிவாகக் கருதியதைத் தொல்காப்பியர் பெருந்திணையின் பால் கூறியதைக் கொண்டு அறியலாம்.

மடலேறுதல் என்பது தலைவனின் காதல் வெளிப்பாடு மட்டும் அன்று . மறுக்கப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட ஒரு கருத்தை சமூகத்திடம் கொண்டு சேர்ப்பதற்கான ஒரு ஆழமான தகவல் தொடர்பு ஊடகமாக அன்று செயல்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. இதனை நெருக்கடித் தகவல் தொடர்பு மற்றம் கவன ஈர்ப்பு உத்தி என்றும் கூறலாம். தலைவன் தன் மனதில் உள்ள அன்பினையும் ஏமாற்றத்தையும் வார்த்தைகளால் கூறாமல் சமூகம் உற்று நோக்கும் (பனைமடல் குதிரை, எருக்கம் பூ) வகையிலான குறியீடாக மாற்றப்படுகிறது. அதாவது தான் கூறக்கருதும் கருத்தை காட்சி வடிவமாக மாற்றி அதன் வேகத்தை தீவிரமாக பரப்புகிறான். குறியீட்டியல் ஆய்வு நிலையில் பனைமடல்குதிரை, எருக்கம் பூமாலை கையில் ஏந்திய ஓவியம் தான் யாருக்காக இந்த நிலையில் உள்ளேன் என்பதை துல்லியமாக சமூகத்திற்கு தெரிவிக்கும் ஒரு தகவல் ஊடகம் மடலேறுதல் ஆகும். ஏறத்தாழ இன்றைய அதிர்வுச்செய்தியைப் போன்று (Breaking News) அன்று மடலேறுதல் இருந்துள்ளது.

## அகப்பொருள் புறப்பொருள்

அகப்பொருள் மற்றும் புறப்பொருள் இலக்கணங்களில் பாணன், விறலி, கூத்தர், தோழி, அந்தணர் போன்றோர் தகவல் தொடர்பாளர்ளாக செயல்பட்டுள்ளனர்.

தலைவன் தலைவிக்கு இடையே தகவல்களைப் பரிமாறவும் இவர்கள் தூது என்னும் தகவல் தொடர்பியல் ஊடகத்தைப் பயன்படுத்தினர்.

## தகவல் தொடர்பில் தூது

உறவுகளை பேணவும் பிரிவுகளைத் தவிர்க்கவும் அரசுகளுக்கு அடையே நல்லுறவை பாதுகாக்கவும் தூது பயன்படுத்தப்பட்டுள்ளது. அகவாழ்வில் குறிப்பாகத் தலைவன் தலைவிக்கு இடையே நிலவும் பிரிவுகளையும் ஊடல்களையும் தீர்க்கத் தூதுவர்கள் பெரும்பங்கு கொண்டனர். தொல்காப்பியர் இவர்களை வாயில்கள் என்று அழைக்கிறார். அகம் மற்றும் புறம் இரண்டிலும் தூது பெரும்பங்கு வகிக்கிறது. தொல்காப்பியத்தில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படுவதற்குரிய காரணங்களில் ஒன்றாகத் தூது செல்வதைக் குறிப்பிடுகின்றார் **”ஓதல் பகை தூது இவை பிரிவே** ” (தொல்.அகத்.27).தோழி, தாய், பார்ப்பான், பாங்கன்,பாணன் என்போர் தூது செல்வர் என்று தொல்காப்பியம் கூறுகிறது.ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன” (தொல்.அகத்.26) ஓதல் மற்றும் தூது ஆகிய இரு செயல்களும் உயர்ந்தோர் எனக் குறிப்பிடப்படும் தலைவனுக்குரிய செயல்களாகும். கடமை சார்ந்த செயல்களாக எடுத்துரைக்கிறார்.தூது என்பது சமூக உறவுகளைப் பேணுவதற்கான ஓர் அறநெறி செயல்பாடாக எடுத்துரைத்துள்ளார். பிரிந்திருப்பவர்களுக்கிடையே செய்தி பரிமாற்றத்தை ஏற்படுத்தி தொடர்பை வளர்க்கிறது. காதல் வாழ்க்கையையும் சமூக பொறுப்புணர்ச்சியையும் எடுத்துரைப்பதில் தூது சிறப்பிடம் பெறுகிறது.

## இறைச்சி

இறைச்சி என்பது கருப்பொருளின் தன்மைக்கு வெளியே அதன் சூழலைக்கொண்டு கேட்பவர் தானாகவே ஒரு பொருளை உய்த்துணர வைக்கும் தகவல் தொடர்புமுறையாகும். தொல்காப்பியர் இதனை **இறைச்சியில் பிறக்கும் பொருளுமாருளவே** (தொல்.பொருளியல்–36)என்று குறிப்பிடுகிறார்.கேட்பவரின் மதிநுட்பத்தைக் கொண்டு சூழலியல் மூலம் தகவலைப் புரிய வைப்பது ஆகும்.காதல் வாழ்க்கையில் தலைவன், தலைவி ,தோழி ஆகிய மூவரும் இறைச்சிப்பொருளில் தங்கள் கருத்துக்களையும் தகவல்களையும் பரிமாறிக்கொள்வர்.

தலைவி தலைவனுடன் சுற்றத்தார் அனுமதியின்றி செல்வது உடன்போக்கு எனப்படும். தலைவி தன்னிடம் உள்ள இவ்எண்ணத்தை கூறும்போது தலைவன் உடன்போக்குச் செல்லும் வழியில் உள்ள இன்னல்களையும் துன்பங்களையும் இறைச்சிப்பொருள்களால் எடுத்துரைப்பான்

> இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி
>
> (தொல் .கற்பியல்.7)

தலைவன் தலைவியை விரும்பி அவள் இருக்கும் இடம்நோக்கி வரும்போது அடையும் இன்னல்களைத் தலைவி தோழியிடம் இறைச்சிப்பொருள்களால் கூறி வருந்துவாள்.

உள்ளுறை உவமம் உவமைப் பொருளுக்குள்ளே செய்தி மறைந்திருக்கும். இறைச்சி உவமையைத் தாண்டி சூழலின் புறத்தே செய்திகளைத் தாங்கி நிற்கும். இலக்கிய உலகில் இந்தசெய்திகளைத் தாங்கி நிற்கும் இவற்றைப் பொருள் புலப்பாட்டு உத்திகளில் அடக்கியுரைப்பர்.

## நடுகல்

எழுத்து மற்றும் அச்சு ஊடகங்களின் வளர்ச்சிக்கு முன்னரே தங்களின் கருத்துக்களையும் செய்திகளையும் நினைவுகளையும் கற்களில் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்குத் தெரிவிக்கும் முறையைத் தமிழர்கள் கொண்டிருந்தனர். நடுகல் என்பது பண்பாட்டின் வெளிப்பாடு என்றே கூற வேண்டும்.வைகை நதி நாகரீகம் எனும் நூலில் சு.வெங்கடேசன் “நடுகற்கள் அமைக்கும் பழக்கம் சங்க காலத்தில் மிக அதிகமாக இருந்ததை இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது. ஏழுவகையான போர்கள் அவற்றின் எண்ணற்ற வகையான மரணங்கள், எல்லா மரணங்களும் சமூகத்தால் நினைக்கப்படுவது இல்லை. அவற்றில் தனித்துவமாக விரத்தை வெளிப்படத்தியவன் செயல்தான் போற்றப்படுகிறது. அந்த வீரனே கல்லிலும் கவியிலும் வாழ்பவன் ஆகிறான்”என்கிறார். நடுகற்களில் வீரனின் உருவம், பெயர், செயற்பாடுகள் போன்ற செய்தி இடம் பெற்றிருக்கும். தொல்காப்பியர் காலத்தும் நடுகல் வழக்கம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. அவர் நடுகல் எடுப்பதற்கான ஆறு நிலைகள் பற்றி பின்வருமாறு கூறுகிறார்

“காட்சி கால்கோல் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லோடு புணர”

(தொல்.புறம்5)

வீரரின் நினைவினைப் பொதுமக்கள் முன்னிலையில் நிலைநிறுத்திய இம்மரபு சமூக நினைவுகளைப் பாதுகாக்கும் சிறந்த தகவல் தொடர்பு முறையாகும்.

## பறவை நிமித்தம்

நம்தமிழ் சமூகத்தில் பறவைகளின் ஒலி திசை போன்றவற்றின் மூலம் நன்மை தீமைகளை அறிந்து விழிப்புடன் செயல்பட்டு வாழ்ந்து வந்துள்ளதை அறியமுடிகிறது.

”அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங்கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே. ”

(தொ. புறத். 30)

இதன்வழி போருக்குச் செல்லும் முன்போ அல்லது நற்செயல்களைத் தொடங்கும் முன்போதோ பறவைகளின் ஒலிகள் மற்றும் திசைகளைக் கொண்டு தகவல் அறியும் முறைகுறித்து அறியமுடிகிறது.

## முரசு

தொல்காப்பிய மரபியலில் அரசனின் அதிகாரம் மற்றும் பொது அறிவிடப்புச் செய்திகள் போன்றவற்றைத் தெரிவிப்பதற்கு ஊடகமாக முரசு விளங்கியதை பின்வரும் நூற்பா உணர்த்துகிறது.

”படையே கொடியே குடையே முரசே
நடையே பரிசே சிவிகையே வான்விளக்
கரைசெய் மாண்பின் அரசர்க் கரிய”

(தொல்.மரபியல்.71)

அரசு சார்ந்த முதுன்மை தகவல்களை வெளியிடும் வாயிலக முரசுஇருந்துள்ளது. படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, பல்லக்கு, போன்றவை அரசனின்

அடையாளக் குறியீடாகும். இதில் முரசு என்பது போர், கொடை, வெற்றி போன்றவற்றை அறிவிப்பதற்கு முக்கிய ஊடகமாகச் செயல்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

## பூக்கள்

பகை நாட்டுப் பசுக்களைக் கவரச் செல்லும் வீரர்கள் அதன் அடையாளமாக வெட்சிப்பூவைச் சூடிச் செல்வார்கள். தொல்காப்பியத்தில் புறத்திணைகள் அனைத்தும் போரின்போது பூக்களே முதன்மையிடம் பெற்றுள்ளதை பார்க்க முடிகிறது வீரன் சூடிச்செல்லும் பூக்களைக்கொண்டே அவ்வீரன் எந்த போருக்காகச் செல்கிறான் என்ற காட்சித்தகவல் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டதை புறத்திணைவாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது.

1. வெட்சிப்பூ - ஆநிரைகளைக் கவரச் செல்லும் நிலையில் சூட்டுவது.
2. கரந்தைப்பூ - கவர்ந்த ஆநிரைகளை மீட்கும் போது சூட்டுவது.
3. வஞ்சிப்பூ - பகை நாட்டின் மீது போர் தொடுக்கச் செல்லும் போது சூட்டுவது
4. காஞ்சிப்பூ-தன்னாட்டை பகைவரிடம்மிருந்து காத்துபோரிடும் நிலையில் அணியும்பூ
5. உழிஞைப்பூ –பகைவரின் மதிலை முற்றுகையிடும் போது அணியும்பூ
6. நொச்சிப்பூ - மதிலைப் பகைவரிடமிருந்து காக்கும் போது சூடும்பூ
7. தும்பைப்பூ – இருநாட்டு மன்னர்களும் எதிர்எதிராக போரிடும் நிலையில் சூட்டுவது
8. வாகைபூ - போரில் வெற்றி அடைந்தபின் மகிழ்ச்சியைச் குறிக்கச் சூட்டும்பூ

> போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
> மாபெருஞ் தானையர் மலைந்த பூவும்

(தொல்.புறத்.5)

1. போந்தை – பனம்பூ (சேரனுக்குரிய அடையாளப்பூ)
2. வேம்பு - வேப்பம்பூ ( பாண்டியனுக்குரிய அடையாளப்பூ)
3. ஆர் - ஆத்திப்பூ ( சோழனுக்குரிய அடையாளப்பூ)

என்று மூவேந்தர்களின் அடையாளப்பூ குறிப்பிடப்பட்டுள்ளன.

## முடிவுரை

தொல்காப்பியர் கூறும் தகவல் தொடர்பு கூறுகள் வாயிலாக நம்முன்னோர்களின் நேர்த்தியான தகவல் தொடர்பு திறனை அறிந்துகொள்ள முடிகிறது.தொல்காப்பியத்தின் வழி பண்டைத்தமிழரின் தகவல் தொடர்பு திறனையும் தகவல் பரிமாற்ற முறையினையும் அறிந்து கொள்ள முடிகிறது. தகவல் பரிமாற்றத்தில் சூழலறிவுல் சமூகப்பொறுப்பு ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்ததையும் அறியமுடிகிறது. இவ்வாய்வின் வழி தொல்காப்பியம் தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல் மட்டுமன்று, அவை பண்டைத்தமிழரின் தகவல் தொடர்பியல் சிந்தனைகளையும் வாழ்வியல் நெறிகளையும் வெளிப்படுத்தும் ஆவணமாகவும் திகழ்கிறது. நவீனத் தகவல் தொடர்பியலின் அடிப்படைக் கூறுகளைத் தமிழர் மரபின் வழியாகப் புரிந்துகொள்ளத் தொல்காப்பியம் துணைபுரிகிறது என்பதை எடுத்துரைக்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார் , அகத்திணைக் கொள்கைகள் பக் .116 – 117
2. சு.வெங்கடேசன், வைகை நதி நாகரீகம், ப.68